# 21-07-2024 செய்தி

## அறிக்கையில்

- வறுமை ஒழிப்பு
- சுற்றுச்சூழல் பராமரிப்பு
- குறைந்த செலவில் மாசிலா எரிசக்தி ஆகியவற்றில்
- தமிழ்நாடு இந்தியாவிலயே முதலிடம்!

**10 குறியீடுகளில் தமிழ்நாடு முன்னிலை!**

- பசிப்பிணி அகற்றல்
- பொருளாதாரம் மற்றும் சிறந்த வேலைவாய்ப்பு
- தரமான கல்வி
- மக்கள் நலம் மற்றும் சுகாதார வாழ்வு
- தொழில் வளர்ச்சி, புத்தாக்கத் தொழில் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்
- தூய்மையான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல்
- சமத்துவமின்மையைக் குறைத்தல்
- உற்பத்தி மற்றும் நுகர்வு
- அமைதியைக் காத்தல், நீதி நிர்வாகம், வலுவான நிறுவனங்கள்
- பாலின சமத்துவம்




## கேரள அரசின் வெளியுறவுத் துறை செயலாளராக வாசுகி நியமனம்

- கேரளாவில் கடந்த 15-ம் தேதி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளராக உள்ள கே. வாசுகி, வெளியுறவு விவகாரங்கள் துறையை கூடுதலாக கவனிப்பார் என்று மாநில அரசு அரசாணை வெளியிட்டது.
- இந்த விவகாரத்தில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை வாசுகிக்கு பொது நிர்வாக (அரசியல்) துறை உதவும்.
- மேலும் டெல்லியில் உள்ள மத்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களுடன் வாசுகி தொடர்பு கொள்வதற்கு டெல்லி கேரள இல்லத்தின் ஆணையர் உதவ வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.
- வெளியுறவு விவகாரம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், கேரள அரசின் இந்த நியமனம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

## 50பேர் அடங்கிய நிழல் அமைச்சரவை ஒடிசாவில் நவீன் பட்நாயக் அதிரடி

- ஒடிசா அமைச்சரவையின் நடவடிக்கைகளை கண்காணிக்க முதன்முறையாக பிஜு ஜனதா தள தலைவர்கள் 50 பேர் அடங்கிய நிழல் அமைச்சரவையை முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் அமைத்துள்ளார்.
- சமீபத்தில் நடந்த லோக்சபா தேர்தலுடன் சேர்த்து ஒடிசா சட்டசபை தேர்தல் நடந்தது.
- இதில், 24 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த நவீன் பட்நாயக்கின் பிஜு ஜனதா தளத்தை பா.ஜ., வீழ்த்தியது.
- மொத்தமுள்ள 147 தொகுதிகளில், 78ல் வெற்றி பெற்று அக்கட்சி அங்கு முதன் முறையாக ஆட்சி அமைத்தது. முதல்வராக மோகன் சரண் மஜி பொறுப்பு ஏற்றார்.
- தேர்தலில் 51 தொகுதிகளில் வென்ற பிஜு ஜனதா தளம், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது.
- எதிர்க்கட்சித் தலைவராக அக்கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்வருமான நவீன் பட்நாயக் தேர்வு செய்யப்பட்டார்.
- புதிய சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஒடிசாவில் நாளை துவங்குகிறது.
- இந்நிலையில், பா.ஜ., அமைச்சரவையின் நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணிக்க, பிஜு ஜனதா தள கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் 50 பேர் அடங்கிய நிழல் அமைச்சரவையை நவீன் பட்நாயக் உருவாக்கியுள்ளார்.
- இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ள பிஜு ஜனதா தளம், நிழல் அமைச்சரவைக் குழுவில் பெரும்பாலும் முன்னாள் அமைச்சர்களே இடம் பெற்றுள்ளனர்.
- இந்தக் குழு, அமைச்சர்கள் துறை ரீதியாக முறையாக செயல்படுகின்றனரா, திட்டங்களை நிறைவேற்றுகின்றனரா, திட்டங்களை நிறைவேற்றுகின்றனரா என்பதை தீவிரமாக கண்காணிக்கும்.
- இது தொடர்பான அறிக்கையை நவீன் பட்நாயக்கிடம் சமர்ப்பிக்கும் என கூறப்பட்டுள்ளது.
- அரசியலுக்கு முந்தைய தனது வாழ்க்கையை பெரும்பாலும் ஐரோப்பிய நாடான பிரிட்டனில் செலவழித்த நவீன் பட்நாயக், அங்கு பின்பற்றப்படும் நிழல் அமைச்சரவை திட்டத்தை ஒடிசாவில் முதன்முறையாக முன்னெடுத்துள்ளார்.
- தேர்தல் தோல்வியால் பிஜு ஜனதா தளத்தில் அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வந்ததாக விமர்ச்சிக்கப்பட்ட நிலையில், நவீன் பட்நாயக்கின் நிழல் அமைச்சரவை திட்டம், ஒடிசா அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

SURESH'